**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.376/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.5 |
| Name : | திரு. சதீஷ்மூர்த்தி |
| Father's Name/Husband Name: | திரு. ஜெயக்குமார் |
| Village : | பெரம்பலூர் |
| Taluk : | பெரம்பலூர் |
| Age : | 31/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 11.02.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது பெரம்பலூரில் வசித்து Software Engineer ஆக பணி செய்து வருகிறேன். கடந்த 26.01.2019 அன்று நானும் எனது நண்பர் வில்லவன்கோதை என்பவருடன் வேப்பந்தட்டையிலிருந்து பெரம்பலூருக்கு வந்து கொண்டிந்தோம். அப்போது மாலை 5.15 மணியளவில் ஆத்தூர் ரோடு சுடுகாடு அருகே போலிசார் இரண்டு நபர்களை வைத்து விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அன்றைய தினத்தில் போலிசார் விசாரணை செய்த நபர்கள் ஆஜர் எதிரிகள் தான். அதில் ஒருவர் தன் பெயர் சதீஷ் என்றும் மற்றொரு நபர் வெள்ளிவேல் என்றும் சொன்னார்கள். பின்னர் எதிரிகளில் தான் 2018ம் வருடத்தில் பெரம்பலூர் புதிய பேருந்து நிறுத்தம் அருகே உள்ள முருகன் கோவில் அருகே ஒரு பெண்மணியிடமிருந்து 7 பவுன் செயின் மற்றும் ஒரு பவுன் செயின் ஆகியவற்றினை பறித்துச் சென்றதாக சொன்னதின்பேரில் போலிசார் ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்து என்னிடம்

இரண்டாம் கையெழுத்தும், முதல் கையெழுத்து வில்லவன்கோதை என்பவரும் கையொப்பம் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் போலிசார் கைப்பற்றுதல் மகஜர் மூலம் 7 பவுன் செயின் ஒன்றும், 1 பவுன் செயின் ஒன்றும் கைப்பற்றினார்கள். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். முதல் கையெழுத்து வில்லவன்கோதை என்பவர் செய்தார். அந்த **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நானும் எனது நண்பரும் வந்த இருசக்கர வாகனத்தின் வண்டி எண், நிறம், வண்டியின் பெயரை போலிசார் விசாரைணையிலும் முதல் விசாரணையிலும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். போலிசார் கேட்டுக் கொண்டதன்பேரில் தான் நான் சாட்சி கையொப்பம் போட்டேன் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தை எந்த அதிகாரி யார் முன்னிலையில் எத்தனை மணிக்கு தயார் செய்தார் என்றால் அதிகாரியின் பெயர் தெரியாது. சாயங்காலம் 5 மணிக்கு நானும் என் நண்பனும் இருந்தோம். எங்கு இருந்து செயினை எதிரிகள் எடுத்துக் கொடுத்தார்கள் என்று முதல் விசாரணையிலும் போலிசார் விசாரணையிலும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக போலிசார் அடையாள அணிவகுப்பு வைத்து நடத்தினார்களா என்றால் இல்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் போலிசார் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரியல்ல ஆத்தூர் ரோட்டில் உள்ள சுடுகாடு பக்கத்தில் போலிசார் ரெக்கவரி செய்த இடத்தில் வைத்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். நான் சொல்வது போல் சம்பவயிடத்தில் கையொப்பமிடவில்லை என்றாலும் ஏற்கனவே காவல் நிலையத்தில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து வைத்திருந்ததில் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் கையொப்பம் போட்டேன் என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 வாசுகி எனக்கு தெரிந்தவர் என்பதால் அவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.